# அபிவிருத்தி அரசியலும் ஹிஸ்புழ்ழாஹ்வும்

*பேராசிரியர். எஸ்.எம்.எம். இஸ்மாயில்*[1]

*ஏ.எம்.எம்.முஸ்தபா*[2]

## அறிமுகம்

எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புழ்ழாஹ் நாம் காண்கின்ற சாமானிய அரசியல்வாதிகள் போன்றவர்களுள் ஒருவரல்ல. இவர் நிருவாகத் திறமையும் சமூக பொருளாதார அபிவிருத்தியில் அக்கறையுள்ளவரும் தேசிய, சர்வதேசியத் தொடர்புகளில் சிறந்த ஆளுமைமிக்கவருமான மிகக் காத்திரமான - இராஜதந்திரமிக்க அரசியல்வாதியாவார். இவருடைய வரலாறும் இவர் அரசியலை அணுகிய பாங்கும் அபிவிருத்தியை நுணுகி நோக்கிய திறனும் அதற்கான அவரது பங்களிப்பும் பேசப்படத்தக்கதாகும். அதனாலேயே இக்கட்டுரை ஹிஸ்புழ்ழாஹ்வின் அபிவிருத்தி அரசியலை விரிவாகப் பேசமுற்படுகின்றது.

## அபிவிருத்தி அரசியல்

அண்மைக்காலமாக அரசியலை அபிவிருத்தி நோக்கில் அணுகும் புதிய போக்கு அரசியல் விவதாங்களிலும் அரசியல்சார்ந்த ஆய்வுகளிலும் முக்கிய இடத்தினைப் பிடித்துள்ளது. சமுக நலன்சார் விடயங்கள் அரசியலின் அடிப்படையாக அமையவேண்டும் என்பது இவ்வபிருத்தி அரசியல் எண்ணக்கருவின் மைய அம்சமாகும். அரசு, ஆட்சியாளர்கள் மக்களின் பொதுநலன் நிறைவேற்றத்துக்கு உரித்தானவர்கள் என்ற ரீதியில் அரசியலில் அபிவிருத்தி முக்கியம் பெறுகின்றது.

இன்று அரசியல் தலைமைத்துவங்கள் அபிவிருத்தியினூடாக தான்சார்ந்த பிரதேசத்திலும் சமூகத்திலும் தேசத்திலும் அதிக அக்கறை கொள்ளும் போக்கினை கண்டுகொள்ள முடியும். குறிப்பாகச் சொல்லப் போனால் அபிவிருத்திதான் அவர்களுடைய அரசியல் ஸ்திரத்தன்மையினை நிர்ணயிக்கும் காரணியாக இன்று சர்வதேச ரீதியாகப் பார்க்கப்படுகின்றது. மக்களின் வாழ்க்கைத் தரத்தினை விருத்தி செய்தல், உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், பொருளாதார விருத்தியினை மேற்கொள்ளல் போன்ற விடயங்களில் அரசியல் தலைமைத்துவங்கள் ஈடுபாடு காட்டிவருகின்றன. குறிப்பாக வளர்ச்சியடைந்த நாடுகளில் அபிவிருத்தியில் தோல்வியடைந்த அரசியல் தலைமைத்துவங்கள் இன்று அரசியல் முகவரியற்றிருப்பதனையும் அவதானிக்க முடிகின்றது.

இத்தகைய அபிவிருத்தி அரசியல் அணுகுமுறையினை இலங்கையின் பல்வேறு அரசியல்வாதிகளின் அரசியல் நடைமுறையில் கண்டுகொள்ள முடியும். அவர்களின் அபிவிருத்தி சார்ந்த அரசியல் நடைமுறையே இலங்கையின் சமுக, பொருளாதார, அரசியல்

[1] உபவேந்தர், இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகம்
[2] பொருளியல் சிரேஸ்ட விரிவுரையாளர் , இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழம்

அபிவிருத்தியில் மிகுந்த செல்வாக்கினைச் செலுத்தியிருக்கின்றது. இவ்விதம் அடையாளம் காணப்பட்டுள்ள அரசியல் ஆளுமைகளுள் மிக முக்கியமானவர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புழ்ழாஹ் ஆவார்.

இவரது அரசியல் பிரவேசம் முரண்பாட்டுச் சூழ்நிலையில் இடம்பெற்ற போதிலும் அபிவிருத்தியினூடாக தேசிய ரீதியில் செல்வாக்குமிக்கதொரு தலைவராக அவரால் வரமுடிந்திருக்கின்றது. இன்று இலங்கையைப் பொறுத்தவரையில் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புழ்ழாஹ் கிழக்கில் மாத்திரமல்லாமல் தேசிய ரீதியிலும் அபிவிருத்தியின் ஊடாக அடையாளம் காணப்பட்ட ஒரு தலைவராகப் பார்க்கப்படுகின்றார். அந்த அடிப்படையில் சமூக நல அபிவிருத்திகளிலும் பிரதேச வளர்ச்சியிலும் மற்றுமுண்டான பல்வேறு துறைகளிலும் அவரது பங்களிப்பினைக் காணமுடிகின்றது.

கிழக்கிலங்கையின் அரசியல் வரலாற்றில் ஹிஸ்புழ்ழாஹ் என்ற நாமம் மீண்டும் மீண்டும் மீட்டப்படுவது தவிர்க்கமுடியாதது. குறிப்பாக கிழக்கின் நீண்டகால முஸ்லிம் அரசியல் வரலாற்றில் உருவாக்கப்பட்டிருந்த பல்வேறு அரசியல் தலைவர்களோடு ஒப்பிடுகின்றபோது இவர் அரசியலுக்குள் பிரவேசித்த காலமும் அவர் தன் பிரதேசத்திற்குச் செய்த பணிகளும் அவரை மிக முக்கியமானவராகவும் முதன்மையானவராகவும் மாற்றியிருக்கின்றது.

அரசியல் பின்னணியும் எத்தகைய அனுபவமும் இல்லாத ஒரு சாதாரண இளைஞனாக ஆரம்பித்த இவரது அரசியல் வாழ்க்கை இன்று பல்வேறுபட்ட காலகட்டங்களை வெற்றிகரமாகக் கடந்து வந்துள்ளது. எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புழ்ழாஹ்வின் அபிவிருத்தி ஆளுமையினை அவரது பாராளுமன்ற உறுப்பினர் பதவியினூடாக மாத்திரமன்றி அவர் வகித்த ஏனைய பதவிகளின் ஊடாகவும் பார்க்க வேண்டியுள்ளது. நீர்வழங்கல், வடிகாலமைப்புச் சபை, விமானப் போக்குவரத் துறை போன்றவற்றில் தவிசாளராக அவர் இருந்து செயற்பட்டதும் மாகாண சுகாதார சுதேச வைத்தியத் துறை அமைச்சராக இருந்து பணியாற்றியதும் தபால் தொலைத் தொடர்பு, சிறுவர் மற்றும் மகளிர் அபிவிருத்தி, பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சராக கடமையாற்றியதும் பல்வேறுபட்ட பாராளுமன்றத் தெரிவுக் குழுக்கள், விசேட குழுக்களில் அங்கத்தவராக, மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவராக இருந்த வரலாறும் அவரது அபிவிருத்திப் பணிகளுக்கு மிகவும் ஊன்றுகோலாக அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேலும் ஒவ்வொரு அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்திலும் ஆளுங் கட்சி அரசியலுடன் இணைந்திருந்தமை எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புழ்ழாஹ்வின் அபிவிருத்திசார்ந்த அரசியலுக்கு வாய்ப்பாக அமைந்தது. கொள்கை வேறுபாடுகள் இருப்பினும் அரசாங்கங்களுடன் இணைந்து மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றுவதில் ஹிஸ்புழ்ழாஹ் அதிக சிரத்தை எடுத்துக்கொண்டார். இப்போக்கு அவரது அரசியல் சித்தத்தின் தனித்தன்மையினை விளக்குகின்றது.

மொத்தத்தில் தனது அரசியல் அதிகாரம், அபிவிருத்தி ஆளுமை என்பவற்றைக் கொண்டு தனது பிரதேசத்தினை முன்மாதிரி நகரமாக மற்றவர்கள் கொள்ளுகின்ற அளவுக்கு மாற்றுகின்ற கைங்கரியத்தில் ஈடுபட்டு மிகச் சிறப்பான வெற்றியினை அவர் பெற்றுள்ளார். குறிப்பாக கிழக்கு மாகாணத்தின் வர்த்தகத் தலைநகராகவும் இஸ்லாமிய கட்டிடக்கலை நகராகவும் தான் பிறந்த மண்ணினை மாற்றியமை அவரது அரசியல் வாழ்வில் மொத்த திருப்தியை அவருக்குள் ஏற்படுத்தியிருக்கிறது எனலாம்.

உண்மையில் ஒரு பிரதேச அபிவிருத்தியின் அளவுகோலாக கல்வி, சுகாதாரம், உட்கட்டமைப்பு விருத்தி, தபால் தொலைத் தொடர்பு, சமூக விழுமியங்கள், கலை கலாசாரம், கட்டிடக் கலை, வேலைவாய்ப்பு போன்ற பல்வேறு அம்சங்கள் காணப்படுகின்றன. இந்த அம்சங்களில் தனது பிரதேசத்தில் ஹிஸ்புழ்ழாஹ் ஆற்றியிருக்கின்ற பங்களிப்பின் மூலம் அவரது அரசியல் வீச்சினையும் அபிவிருத்திப் பங்களிப்பினையும் கண்டுகொள்ளுவதோடு அப்பிரதேசத்தின் அபிவிருத்தி அளவினையும் மட்டிட முடியும்.

**கல்விசார் பங்களிப்பு**

ஒரு சமூகத்தின் அபிவிருத்தியில் கல்வி மிக முக்கிய பங்கினை வகிக்கிறது என்பதனை நன்கு உணர்ந்தவர் ஹிஸ்புழ்ழாஹ். அவரது வளர்ச்சியின் அடிப்படையே கல்வியேயாகும். தனது பிரதேச மக்கள் வர்த்தகத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருப்பதனை நன்கு உணர்ந்த அவர் அது அபிவிருத்தியின் நிலையான அளவுகோல் அல்ல என்பதனை உணர்த்தி மக்களை கல்வியின்பால் விழிப்புணர்வடையச் செய்வதில் பெரும் பங்காற்றினார். அதற்கான பௌதீக ரீதியான பங்களிப்பினை மிகக் காத்திரமான முறையில் அவர் நிறைவேற்றியமைக்கு பல சான்றுகள் உண்டு. பாலர் கல்வி முதல் பல்கலைக்கழகக் கல்வி வரை அவரது சேவையும் பங்களிப்பும் விரிவுபட்டிருந்தது.

தேசிய ரீதியில் பாலர் பாடசாலைக்கான பொதுவான பாடத்திட்டத்தினை உருவாக்க நடவடிக்கை எடுத்ததுடன் மட்டக்களப்பு மாவட்டத்தின் பாலர் பாடசாலை வளர்ச்சியில் ஹிஸ்புழ்ழாஹ் குறிப்பிடத்தக்க பங்காற்றியிருந்தார். பெரும்பாலும் அம்மாவட்டத்தின் பல கிராமங்களில் பாலர் பாடசாலைக் கட்டிடங்களை அமைத்து ஆசிரியர் பயிற்சி வழங்குதல் முதலான நடவடிக்கைகளில் அவர் பங்காற்றியுள்ளார். மேலும் ஆரம்பப் பாடசாலைகளின் பௌதீக வளங்களை விருத்தி செய்து பாடசாலைகளைத் தரமுயர்த்தி அவற்றுக்கான பங்களிப்புக்களை நல்கியுள்ளார். குறிப்பாக பல பாடசாலைகளை தேசிய பாடசாலையாக உருவாக்கிய அவரது முயற்சியில் வாழைச்சேனை அந்நூர் மகா வித்தியாலயத்தின் வரலாறு மிக முக்கியமானது. 24 மணி நேரத்திற்குள் அப்பாடசாலையை தேசிய பாடசாலையாகத் தரமுயர்த்தி பெரும் சாதனையை அவர் நிலைநாட்டினார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்கென சுமார் 22 பாடசாலைகளுக்கு சுமார் 20 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்தமை ஹிஸ்புழ்ழாஹ்வின் கல்விக்கான பங்களிப்பில் பெருமையுடன் நினைவுகூறத்தக்க அம்சமாகும். குறிப்பாக ஆராதனை மண்டபம், விளையாட்டு மைதானம், தொழில்நுட்பக் கூடங்களை நிறுவுதல் முதலானவற்றை பாடசாலைகளில் உருவாக்கியும் அபிவிருத்தி செய்தும் பணியாற்றியுள்ளார்.

மேலும் பாடசாலை மாணவர்களின் நன்மை கருதி சனநெரிசல் மிக அதிகமாகவுள்ள மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதியின் குறுக்கே சுரங்கப் பாதையினை அமைத்து அதன் மூலம் சமூகத்தின் கல்வி விருத்தியில் தமக்குள்ள அக்கறையுணவர்வினை எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புழ்ழாஹ் நிரூபித்துக்காட்டியுள்ளார். குறிப்பாக கிழக்கில் அமையப்பெற்றுள்ள முதலாவது சுரங்கப் பாதை இதுவாகும்.

அதேவேளை மஞ்சந்தொடுவாயில் அமைந்துள்ள தேசிய தொழில்நுட்பக் கல்லூரிக்கு முன்னாள் உயர் கல்வி அமைச்சர் ஏ.சீ.எஸ்.ஹமீட் அவர்களின் ஊடாக ஆசிய அபிவிருத்தி வங்கியின் பங்களிப்பினைப் பெற்றுக்கொடுத்து அந்நிறுவனத்தின் வளர்ச்சிக்கு ஹிஸ்புழ்ழாஹ் பெரும் பங்களிப்பினைச் செய்துள்ளார். இதன்விளைவாக ஆயிரக்கணக்கான இளைஞர் யுவதிகள் தொழில்நுட்பக் கல்வியினைப் பயின்று தொழில்வாய்ப்புக்களைப் பெற்றுவருவது குறிப்பிடத்தக்கது. அதேபோன்று காத்தான்குடியில் உள்ள ஏறாவூர் தகவல் தொழில்நுட்ப பயிற்சி நிலையமும் அவரது பங்களிப்பின் மூலம் உருவாக்கப்பட்டதாகும். மேலும் தனது பிரதேசத்தில் தொழில்பயிற்சி நிலையத்தினை நிறுவி மாணவர்கள் அதில் பயிற்சி பெறவும் வேலைவாய்ப்புக்களைப் பெறவும் அவர் வழிவகுத்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கல்விக் கல்லூரியினை உருவாக்குவதற்கான நிலத்தினை ஒதுக்கி உலக வங்கியின் மூலம் அக்கல்லூரியின் பௌதீக வளங்களினை விருத்தி செய்து ஆசிரியர் கல்வி வளர்ச்சியிலும் குறிப்பிடத்தக்க பங்களிப்பினை அவர் ஆற்றியுள்ளார். உயர் கல்வி வரலாற்றில் கிழக்குப் பல்கலைக்கழகத்தினை அடியாகக் கொண்டு அவர் மிகப்பெரும் சாதனையை நிலைநாட்டியுள்ளமை இங்கு மனங்கொள்ளத்தக்கதாகும். அப்போதய ஜனாதிபதி சந்திரிகா பண்டார்நாயக்க குமாரதூங்க அவர்களின் அறிவுறுத்தல்களின் பேரில் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் விபுலானந்த இசை நடனக் கல்லூரியை அப்பல்கலைக்கழகத்தின் ஒரு பீடமாக மாற்றியது மட்டுமன்றி மருத்துவ பீடம் ஒன்றினையும் உருவாக்கிய பெருமை அவரையே சாரும்.

வட கிழக்குப் பிரதேசத்தில் உருவான அசாதாரண சூழ்நிலை காரணமாக வடக்கு கிழக்கு பல்கலைக்கழகங்களில் கல்விகற்ற முஸ்லிம் மாணவர்களின் அவல நிலையினைப் போக்குவதற்காக சந்திரிக்கா பண்டார்நாயக்க குமாரதூங்க அவர்களின் உத்தரவின் பேரில் கலாநிதி றிச்சர்ட் பத்திரன அவர்கள் உயர் கல்வி அமைச்சராக இருந்த போது முஸ்லிம்

காங்கிரசின் தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரப் அவர்களுடைய பெரும் முயற்சியின் காரணமாக தென்கிழக்குப் பல்கலைக்கழகம் உருவானது. இப்பல்கலைக்கழகத்தின் ஸ்தாபிப்புத் தொடர்பாக அஷ்ரப் அவர்களோடு பெரும் துணையாக இருந்து செயற்பட்ட முன்னாள் பிரதியமைச்சர் யூ.எல்.எம்.முஹைடீன் அவர்களினதும் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புழ்ழாஹ் அவர்களினதும் பங்களிப்பு நினைவுபடுத்தப்பட வேண்டியதாகும்.

மேலும் இலங்கையில் வருடாந்தம் வெளியேறும் மூவாயிரத்திற்கு மேற்பட்ட மார்க்கக் கல்வியினைப் பயின்ற அறிஞர்களுக்கு பல்கலைக்கழக கல்வியினைப் பெற்றுக் கொள்வதற்காக சவூதி அரேபிய அரசாங்கத்தின் துணையுடன் தனியார் பல்கலைக்கழகம் ஒன்றை அவர் ஸ்தாபித்துள்ளார். அதி உத்தம ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அவர்களின் உத்தரவின் பேரில் ஆரம்பிக்கப்பட்ட இப் பல்கலைக்கழகம் மலிக் அப்துல்லா பல்கலைக்கழக கல்லூரி என்ற பெயரில் இயங்கிவருகின்றது. இப்பல்கலைக்கழகத்தின் வளர்ச்சியினூடாக எதிர்காலத்தில் ஹிஸ்புழ்ழாஹ்வின் நாமம் தன்னிகரற்று ஒலிக்கும் என்பதில் சந்தேகமில்லை.

**சுகாதாரம்**

ஆரம்பத்தில் மட்டக்களப்பு மாவட்டம் சுகாதாரத் துறையில் பெரிதும் வளர்ச்சியுறாத பிரதேசமாகவே இருந்து வந்துள்ளது. ஆரோக்கியமான மனித சமூகம் ஒன்றினை உருவாக்குவதன் மூலமே வாழ்க்கையில் முன்னேற்றத்தினைக் கண்டுகொள்ள முடியும் என்பதனை நன்கு உணர்ந்த ஹிஸ்புழ்ழாஹ் தனது மக்களின் சுகாதார வாழ்வினை மேம்படையச் செய்வதில் அதிக அக்கறை எடுத்துக்கொண்டார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பல்வேறு இடங்களிலும் புதிதாக பிரதேச - மாவட்ட - தள வைத்தியசாலைகளை உருவாக்கியதோடு பல வைத்தியசாலைகளை தரமுயர்த்த எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புழ்ழாஹ் அவர்கள் எடுத்த முயற்சிகள் என்றும் நினைவுகூறத்தக்கதாகும். குறிப்பாக அவரது அயராத முயற்சியினால் யுத்த காலத்திலும் யுத்தம் இடம்பெற்ற பிரதேசங்களிலும் வைத்தியசாலைகள் பல திறந்து வைக்கப்பட்டன. இவ்வகையில் கொக்கொட்டிச்சோலை வைத்தியசாலை நிர்மாணம் முக்கியமானது. அதேவேளை ஹிஸ்புழ்ழாஹ் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சராக இருந்த போது சுமார் 800 மில்லியன் ரூபா செலவில் நோர்வே அரசாங்கத்தின் நிதியுதவியில் அவரது பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள வைத்தியசாலையை நவீனமயப்படுத்தியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

மேலும் வைத்தியசாலைகளை அமைத்தலுக்கு நிதியுதவியளித்தல், வைத்திய உபகரணங்களைப் பெறல், வைத்தியசாலைகளுக்கான அம்பியுலன்ஸ் வாகனங்களைப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் புதிய வைத்தியசாலைக் கட்டிடங்களைத் திறந்துவைத்தல் போன்ற பல்வேறு வழிகளில் சுகாதாரத் துறைசார்ந்த அவரது பங்களிப்பு நீண்டுசெல்கின்றது.

தான் வெவ்வேறு பொறுப்புக்களை வகித்தபோதும் துறைசார் அமைச்சர்களை வரவழைத்து தமது மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு அவர் மிகுந்த புத்திசாதூரியத்துடன் செயற்பட்டார். இவ்வகையில் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் சுகாதார, சமூக சேவைகள், நெடுஞ்சாலைகள் அமைச்சராக இருந்த ஏ.எச்.எம். பௌஸி அவர்கள் மூலம் தமது மக்களுக்கு அவர் நிறைய சேவைகளை ஆற்றியுள்ளார்.

1996ஆம் ஆண்டில் மட்டக்களப்பு மாவட்ட போதனா வைத்தியசாலைக்கு பிரதியமைச்சரின் வேண்டுகோளின் பேரில் சுகாதார, நெடுஞ்சாலை, பெருந்தெருக்கள் அமைச்சினால் பல கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டு வைத்தியசாலை மேம்படுத்தப்பட்டது. தான் கிழக்கு மாகாண சபையின் சுதேச வைத்தியம் தொடர்பான அமைச்சராக நியமிக்கப்பட்ட போது கிழக்கு மாகாணத்தின் சுதேச வைத்தியத்துறையினை மேம்படுத்துவதற்கு பல்வேறு சேவைகளை ஆற்றியிருந்தார்.

மாகாண சுகாதார அமைச்சராக தான் பதவி வகித்த இரண்டு வருடங்களுக்குள் கிழக்கு மாகாணத்தில் 25 மேற்பட்ட ஆயுள்வேத வைத்தியசாலைகளை அவர் ஆரம்பித்துவைத்தார். இவையெல்லாவற்றுக்கும் மேலாக வடக்கில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு காயப்முற்று பல்வேறு அவலங்களுடன் அங்கவீனர்களாக வந்த ஆயிரத்திற்கு மேற்பட்டவர்களை ஒரு நிமிடமும் தூங்காது இந்தியாவில் இருந்து வைத்தியர்களைக் கொண்டு வந்து அம்மக்களுக்கு சுகாதார சேவைகளை அமைச்சர் வழங்கியிருந்தார். ஆயுதக் குழுக்களின் அச்சுறுத்தல்களின் போதும் இவ்வாறான சேவைகளை வழங்கியிருந்தமை அவரது அரசியல் வரலாற்றில் என்றும் குறிப்பிட்டுக் கூறக்கூடியதொரு சேவையாகும்.

ஹிஸ்புழ்ழாஹ் சுகாதார வளர்ச்சிக்கு ஆற்றி பங்களிப்பின் வரிசையில் காத்தான்குடி அரச வைத்தியசாலையை மாவட்ட வைத்தியசாலையாகவும் தள வைத்தியசாலையாகவும் தரமுயர்த்தியமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். அதுமட்டுமன்றி அவ்வைத்தியசாலையின் ஊழியர்கள், உத்தியோகத்தர் நியமனம், உட்கட்டுமானப் பணிகள் முதலியனவற்றில் அவர் அக்கறையோடு செயற்பட்டார்.

வெளிநாட்டு நிறுவனங்களின் உதவியுடன் இலவச சிகிச்சை முகாம்களையும் சத்திர சிகிச்சைகளையும் நடாத்துவதற்கும் அவர் உதவி புரிந்துள்ளார். மக்கள் சௌக்கியத்திற்காக ஊரின் பல்வேறு இடங்களில் சுகாதார நிலையங்களை அமைத்தும் நகர சபையினூடாக சுகாதார நலத்திட்டங்களை உருவாக்கியும் நடைமுறைப்படுத்தினார். குழாய்நீர் விநியோகம், வடிகான்கள் அமைப்பு முதலானவற்றின் ஊடாக ஆரோக்கியமான வாழ்க்கையொன்றுக்கு அவர் வழிவகுத்துள்ளார்.

சுகாதாரத் துறைக்கான அவரது பங்களிப்பில் பின்னடைவாக சுனாமி அனர்த்தத்தில் விளைவாக காத்தான்குடி வைத்தியசாலை பாதிக்கப்பட்டது. அதனை வெற்றிகரமாக 600 மில்லியன் ரூபா செலவில் முற்றாக மீழ் கட்டுமானம் செய்தமை மிகப்பொறுப்புடன் நினைவுபடுத்தப்பட வேண்டிய விடயமாகும்.

மாகாண அமைச்சராகப் பொறுப்பேற்ற ஹிஸ்புழ்ழாஹ் தமது அமைச்சின் மூலம் கிழக்கு மாகாண சபைக்குட்பட்ட மூன்று மாவட்டங்களிலும் சுகாதாரத்துறை விருத்திற்கு அரும்பணியாற்றினார். திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாரை மாவட்டங்களில் சுதேச வைத்தியத்துறையினை மேம்படுத்தும் நோக்கில் அவரால் ஆயுள்வேத வைத்தியசாலைகள் திறக்கப்பட்டன.

அதேவேளை சுதேச வைத்தியத்திற்குப் புத்துயிரளிக்கும் நோக்கில் அவர் தனது கொள்கை வேலைத் திட்டத்தினை நடைமுறைப்படுத்தியிருந்தார். ஆயுள்வேத வைத்திய நிலையங்களை அமைத்ததுடன் மட்டுமல்லாது அவற்றின் உள்ளக வசதிகளை விருத்தி செய்தல், குறித்த வைத்தியசாலைக்கான வைத்தியர்களை நியமித்தல், அது பற்றிய விழிப்பினை ஏற்படுத்தல் ஆகிய விடயங்களில் அமைச்சர் மிகுந்த கரிசனையுடன் செயற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். அவ்வாறே பஞ்சகரும வைத்தியத் துறை விருத்தியினை கிழக்கில் ஏற்படுத்திய பெருமை ஹிஸ்புழ்ழாஹ்வினையே சாரும்.

இவ்விதம் சுகாதாரத் துறை விருத்தியில் கவனம் செலுத்திய எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புழ்ழாஹ் இத்துறையில் கடமையாற்றும் முஸ்லிம் பெண் தாதியர் ஆடைகள் தொடர்பான சட்ட ஒழுங்குகளை வடிவமைப்பதிலும் கூடிய கரிசணை எடுத்துக்கொண்டார். இதற்கமைய இஸ்லாமிய கலாசார விழுமியங்களுக் உட்பட்டு பெண் தாதியர் ஆடை தொடர்பான தேசிய நடைமுறை ஒன்றிற்கும் அவர் வழிவகுத்தார்.

**உட்கட்டமைப்பு**

ஒரு நாட்டினுடைய அபிவிருத்தியினை அளந்து சொல்லும் அளவுகோல்களில் ஒன்றாக அந்த நாட்டினுடைய உட்கட்டுமான அமைப்புக்கள் மிக முக்கியம் பெறுகின்றன. அவற்றுள் மிக முக்கியமாக வீதி அபிவிருத்தி பற்றிக் குறிப்பிட வேண்டும். நாட்டிலே காணப்படும் தேவைகளின் பொருட்டும் மக்களினுடைய வாழ்க்கை தரத்தின் அடிப்படையிலும் காலத்துக்குக் காலம் வீதிகள் மீள் நிர்மானம் செய்யப்பட வேண்டிய தேவை இருந்து வருகின்றது. இந்த விடயம் ஒரு நாட்டுக்கு மாத்திரம் அல்ல, அந்த நாட்டினுடைய ஒவ்வொரு நகரத்திற்கும் பொருந்தும்.

அந்தவகையில் குறைந்த நிலப்பரப்பில் மிக அதிகமான மக்கள் செறிந்து வாழும் காத்தான்குடியை பொறுத்தவரை வீதிகள் அடிக்கடி புனர்நிர்மாணத்திற்கு உள்ளாக வேண்டிய

தேவையும் வீதிகளை விஸ்தரிக்க வேண்டிய அவசியமும் காலத்துக்கு காலம் இருந்து வந்திருக்கிறது. இப்போதும் அது அவசியமான ஒன்றாக பார்க்கப்படுகின்றது. முழுக்க முழுக்க வீதியின் இரு மருங்கிலும் வர்த்தக நிலையங்ள் காணப்படும், மட்டக்களப்பு நகரையும் கல்முனை நகரையும் இணைக்கும் பிரதான வீதியை விஸ்தரிக்க வேண்டிய தேவை மிக அவசிமான ஒன்றாக மாறியிருந்த நிலையில் 1990 ஆம் ஆண்டுக்கு பிற்பட்ட காலம் முதல் இன்று வரை இரண்டு தடவைகள் விஸ்தரிப்பு நடவடிக்கைகள் வெற்றிகரமாக இடம்பெற்றிருக்கின்றது. இந்த விஸ்தரிப்பு நடவடிக்கைகள் முழுக்க முழுக்க ஹிஸ்புழ்ழாஹ் அவர்களின் வழிகாட்டுதலிலும் அவரது அயராத முயற்சியினாலும் முன்னெடுக்கப் பட்டவைகளாகும்.

மட்டக்களப்பு-கல்முனை பிரதான வீதி விஸ்தரிப்பு நடவடிக்கைகள் ஹிஸ்புழ்ழாஹ்வின் அரசியல் வாழ்விற்கே சவாலாக அமைந்தது. ஏராளமான வர்த்தக நிலையங்களை உடைக்க வேண்டி இருந்த இரு சந்தர்ப்பங்களிலும் ஹிஸ்புழ்ழாஹ் நோக்கி வர்த்தகர்களின் எதிர்ப்புகள் இவரது அரசியல் எதிரிகளால் குறி வைக்கப்பட்டிருந்தன; நீதி மன்றத்தில் வழக்குகளும் தொடரப்பட்டிருந்தன. ‘‘இந்த எதிர்ப்புக்களால் எதிர்வரும் தேர்தல்களில் எனது அரசியல் வாழ்வு அஸ்த்தமனம் பெற்றாலும் பரவாயில்லை. இந்த சமூகத்தின் மிக அத்தியாவசிய தேவையான இந்த விஸ்தரிப்பு பணியினை நான் கைவிடப்போவதில்லை’’ என்று ஹிஸ்புழ்ழாஹ் வெளியிட்டிருந்த கருத்து பிரதேச அபிவிருத்தியில் அவர் காட்டிய அக்கறையினை மிகத்துல்லியமாக வெளிப்படுத்தியது.

இவரது காலத்தில் முதன் முதலில் செய்யப்பட்ட பிரதான வீதி விஸ்தரிப்பு நடவடிக்கையானது கிட்டத்தட்ட ஒரு தசாப்த காலம் பொருத்தமாக இருந்தாலும் அதன் பின்னர் ஏற்பட்ட பாரிய சன நெருக்கடி மற்றும் அதிகரித்த வர்த்தக நடவடிக்கைகள் காரணமாக மீண்டும் ஒரு தடவை வீதிகள் விஸ்தரிப்புக்குள்ளாக வேண்டிய தேவை 2007 ஆம் ஆண்டுகளில் பிற்பாடு ஏற்பட்டிருந்தது. இது தொடர்பில் பாரிய திட்டங்களை ஏற்கனவே தனக்குள் வைத்திருந்த ஹிஸ்புல்லாஹ் அதனை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை ஆரம்பிக்கத் தொடங்கினார். ஜப்பானிய நிதி உதவியில் தம்புள்ள முதல் பானம வரையான வீதிகள் புனர்நிர்மாணத்திற்கு உள்ளாக்கப்பட்டு வந்த நிலையில் இந்த சந்தர்ப்பத்தினை பயன்படுத்தி காத்தான்குடி பிரதான வீதியினை நவீனப்படுத்துகின்ற வாய்ப்பு இவருக்கு சாதகமாக அமைந்திருந்தது.

இந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த ஏனைய நகர வீதிகளை விட அகலமாகவும் நவீனமாகவும் தனது பிரதேசத்தின் வீதி உருவாக்கப்பட வேண்டும் என்பது ஹிஸ்புல்லாஹ்வினுடைய கனவாக இருந்தது. ஆனால் அந்த கனவினை நிஜப்படுத்துவது அவ்வளவு இலகுவான காரியமாக அமைந்திருக்கவில்லை. கடந்த முறையினை விட இந்த முறை பாரிய எதிர்ப்பலைகளை இவரது அரசியல் எதிரிகள் முடுக்கிவிட்டிருந்தார். அபிவிருத்தி பணிகளுக்காக வெளிநாடுகளில் நிதிகளைக் கொண்டு வருவதில் விற்பன்னராக இருந்த

ஹிஸ்புல்லாஹ்வுக்கு இந்த எதிர்ப்புக்கள் பெரும் சவாலாக மாற்றம் பெற்றிருந்தது. இருந்த போதும் தனது சமூகத்தின் எதிர்கால தேவைகளை மிக கவனமாக அடையாளம் கண்டு சேவையாற்றி வரும் இவருக்கு இந்த எதிர்ப்புக்கள் ஒன்றும் பெரிய பொருட்டாக தென்படவில்லை. தனது அரசியல் வாழ்வை பணயம் வைத்தாவது தனது அழகிய திட்டத்தினை நிறைவேற்றுவதில் கண்ணும் கருத்துமாக இருந்து அதனை சாதித்துக் காட்டிய பெருமை அவரையே சாரும்.

கடைகளின் முற்பகுதியை உடைப்பதன் மூலம் ஏற்படும் தற்காலிக பொருளாதார இழப்புக்களை மாத்திரம் மையப்படுத்தி எதிர்காலத்தில் இந்த குறிப்பிட்ட அபிவிருத்தியினால் ஏற்படப்போகும் பன்மடங்கான பொருளாதார நன்மைகளை இழந்து விட இவர் தயாராக இருக்கவில்லை. அவரது விடாப்பிடியின் விளைவில் உருவான இன்றைய காத்தான்குடியின் பிரதான வீதி முழு நாட்டுக்கும் வியப்புக்குரிய ஒன்றாக மாற்றம் பெற்றிருக்கின்றது.

பிரதான வீதியின் பாரிய அபிவிருத்தியோடு இணைந்ததாக நிர்மாணிக்கப்பட்டு அனைத்து மக்களாலும் பேசப்பட்டு வரும் விடயம்தான் காத்தான்குடியில் அமையப்பெற்ற இலங்கையின் நான்காவது நிலக்கீழ் நடைபாதையாகும். காத்தான்குடி மீரா பாலிகா தேசிய பாடசாலைக்கு முன்பாக அமையப்பெற்றுள்ள இந்த சுரங்கப் பாதையானது அந்த கல்லூரி மாணவர்களின் பாதுகாப்பான வீதிக்கடவையாக தொழிற்பட்டு வருகின்றது. இவரது அரசியல் எதிரிகளால் மிகக் கடுமையான விமர்சனத்துக்குள்ளான இந்த சுரங்கப்பாதை அபிவிருத்தி திட்டமானது சாத்தியமற்ற ஒன்றாகவே அவர்களால் பார்க்கப்பட்டது. இருந்தும் தனது தீர்க்கமான அரசியல் ஆளுமையினாலும் அந்த இடத்தில் அதற்கான தேவையின் அவசியத்தினாலும் அதனை சாத்தியப்படுத்தி காட்டி நகரின் அழகியல் சின்னங்களில் ஒன்றாக அதை மாற்றிய பெருமையும் ஹிஸ்புல்லாஹ்வையே சாரும்.

பிரதான வீதி அபிவிருத்தியோடு மாத்திரம் இவரது பணிகள் முற்றுப்பெறவில்லை. அதையும் தாண்டிய பாரிய சவால் ஒன்றும் இவரை நோக்கி இருந்தது. கால காலமாக நீர் ஓட்டத்திற்கென அமையப்பெற்றிருந்த இயற்கையான ஓடைகள் அத்தனையும் அதிகரித்து வரும் சனத்தொகை பெருக்கத்தின் அடிப்படை தேவைகளுக்காக மூடப்பட்டு அந்த குறிப்பிட்ட இடங்கள் வீடுகளாகவும் கடைகளாகவும் மாறி விட்ட ஒரு நிலையில் பருவ மழை பொழிகின்ற கால கட்டங்களில் மிகவும் மோசமான வெள்ளப்பெருக்கினை காத்தான்குடி நகரம் அதிலும் குறிப்பாக புதிய காத்தான்குடியை சார்ந்த பகுதிகள் சந்தித்து வருகின்றமை மிகவும் வெளிப்படையான விடயமாகும். எனவே இது குறித்து மிகவும் காத்திரமான நடவடிக்கையினை முடுக்க வேண்டிய காலத்தின் அவசியமும் மக்களின் வேண்டுகோளும் இருந்து வந்தது. அங்காங்கே ஒரு சில வீதிகள் கொங்கிரீட் வீதிகளாக அபிவிருத்தி கண்ட போதும் பாரிய பிரச்சினையாக மாறி இருந்த வெள்ளப்பிரச்சினைக்கு அவை சரியான தீர்வினை முன்வைக்கவில்லை. முழுக்காத்தான்குடியையும் மையப்படுத்திய வடிகான்கள் பொருத்தமான

ஒழுங்குபடுத்தலோடு அமைப்பதன் மூலமாகத்தான் இந்தப் பிரச்சினைக்குரிய தீர்வினைப் பெற முடியும் என்பது துறைசார் நிபுணர்களின் கருத்தாக இருந்தது.

உண்மையில் இதுவும் ஒரு சவாலான பணியாகவே ஹிஸ்புல்லாஹ்வுக்கு மாறி இருந்தது. இருந்த போதும் அபிவிருத்தி தொடர்பில் நீண்ட அனுபவம் கொண்ட ஹிஸ்புல்லாஹ்வுக்கு இதனை நடைமுறைப்படுத்துவது ஒன்றும் அவ்வளவு பெரிய விடயமாக இருக்கவில்லை. உரிய தொழில்நுட்ப ஆலோசனைகள் உள்வாங்கப்பட்டு பல்வேறு அரசம ற்றும் தனியார் பொறியியல் நிறுவனங்களின் மூலம் திட்டங்கள் தீட்டப்பட்டு இந்த பாரிய பணி தற்போது மும்முரமாக இடம்பெற்று வருவதோ நிறைவு பெறுவதற்கான இறுதிக் கட்டத்தினையும் அடைந்திருக்கின்றது. குறிப்பாகச் சொல்வதானால் காத்தான்குடியில் காணப்படும் அனைத்து சிறிய ஒழுங்கைகள் உட்பட ஏனைய அனைத்து வீதிகளும் இவரது திட்டத்தின் கீழ் அபிவிருத்தி கண்டு வருவது இவரது அபிவிருத்தி அரசியலுக்கான சான்றாக பார்க்கப்படுகின்றது.

வீதி அபிவிருத்தி தொடர்பில் இன்னும் ஒரு மைல் கல்லினையும் இவர் அடைந்திருக்கின்றார். முழுக்க முழுக்க கட்டிடங்களால் நிரப்பப்பட்டு ஒரு கொங்கிரீட் காடாக மாற்றம்பெற்று வரும் காத்தான்குடி நகரத்தில் ஓய்வு நேரங்களினை இன்பமாக கழிப்பதற்கான ஒரே ஒரு இடமாக கடற்கரை மாத்திரமே எஞ்சி இருந்தது. 1990களின் ஆரம்பப் பகுதி வரை குறிப்பிட்ட ஒரு சில கடற்கரைப் பகுதிகளுக்கு மாத்திரமே மக்கள் சென்று வருவதற்கான வசதிகள் இருந்தது. இதனை மேலும் விரிவுபடுத்தி முழுக் கடற்கரைக்கும் சமாந்தரமாக ஒரு வீதியினை அமைக்க வேண்டிய தேவை இருந்து வந்த நேரத்தில் இவரது அயராத முயற்சியினால் அந்த பணிகளும் வெற்றிகரமாகச் செய்யப்பட்டு 1990களின் நடுப்பகுதியில் கிழக்கிலங்கையின் மிக முக்கிய பொழுது போக்கு தளமாக காத்தான்குடி கடற்கரை பெயர் பெற்றது.

அபிவிருத்தி என்று வருகின்ற போது அது வெறுமனே காத்தான்குடிக்குள் மட்டும் மட்டுப்படுத்தப்பட்டதாக அமைந்திருக்கவில்லை. ஹிஸ்புல்லாஹ்வினுடைய அபிவிருத்தித் திட்டங்கள் காத்தான்குடியை அண்டிக் காணப்படும் ஏனைய முஸ்லிம், தமிழ் கிராமங்களுக்கும் மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏனைய பிரதேசங்களுக்கும் இன மொழி பாகுபாடின்றி இவருடைய வீதி அபிவிருத்திப் பணிகள் செய்யப்பட்டுள்ளது. தற்போதய மாவட்ட அபிவிருத்திக் குழுத்தலைவராக காணப்படும் ஹிஸ்புல்லாஹ் முழு மாவட்டத்திற்கும் தனது அனுபவத்தின் ஊடாக அபிவிருத்தி தொடர்பில் சேவையாற்றி வருகின்றமை வெளிப்படையான ஒரு விடயமாகும்.

உட்கட்டமைப்பு பணிகளுள் மின்சார வசதிகள், குடிநீர் திட்டங்கள், போக்குவரத்து விடயங்களிலும் ஹிஸ்புல்லா போதிய கவனம் செலுத்தி வந்துள்ளார். மட்டக்களப்பு மாவட்டம் முழுக்க மின்சார வசதியினை ஏற்படுத்தி அதன் சிறப்பான விநியோகத்திற்கும் வழிசமைத்துள்ளார். 2014 டிசம்பர் 31இற்குள் மட்டக்களப்பு மாவட்டத்தின் எந்த வீட்டிலும் மின்சாரம் ஒளிரமுடியாமல் இருக்கமுடியாது என்ற அவரது தீர்மானம் மின்சார அபிவிருத்தி

தொடர்பாக அவர் கொண்டுள்ள நம்பிக்கையையும் அவரது பணியின் உச்சத்தையும் வெளிப்படுத்திக் காட்டுகின்றது.

மட்டக்களப்பு மாவட்ட மக்கள் சுகாதாரமான முறையில் குடிநீரினைப் பெற்றுக்கொள்வதில் பல சிரமங்களை எதிர்கொள்கின்றனர். இதனால் சிறுநீரக நோய்கள், புற்றுநோய், தோல் வியாதி முதலானவற்றை இப்பிரதேச மக்கள் எதிர்கொண்டனர். இவற்றிற்கெல்லாம் தீர்வு காண்பதற்காக நீர்வழங்கள் வடிகாலமைப்புச் சபையின் தவிசாளராக இருந்த போது பல மில்லியன் ரூபா செலவில் மட்டக்களப்பு மாவட்டத்தின் குடிநீர் தேவையினை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. பாதுகாப்புக் கெடுபிடிகளுக்கு மத்தியில் இச்சேவையினை அவர் வழங்கியமை குறிப்பிடத்தக்கதாகும். அதுமாத்திரமின்றி குடிநீரைப் பெற்றுக்கொள்ள முடியாத சுமார் 2000 குடும்பங்களுக்கு இலவசமாக குடிநீரை வழங்க அவர் மேற்கொண்ட நடவடிக்கை குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

போக்குவரத்து வசதிகளை விஷ்தரிக்கும் வகையில் அமைச்சர் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார். வாகரை டிப்போ உட்பட பல புதிய டிப்போக்களை மட்டக்களப்பு மாவட்டத்தில் நிறுவுவதற்கு பங்களிப்புச் செய்ததுடன் பல புதிய பஸ் வண்டிகளை வழங்கி, அவற்றுக்கான ஆளணிகளை இணைத்துக்கொள்ளவும் தேவையான நடவடிக்கைகளை எடுத்தார். பஸ் டிப்போவுக்கான இதர வசதிகளைப் பெற்றுக்கொடுப்பதிலும் அவர் மேற்கொண்ட முயற்சிகள் போற்றத்தக்கதாகும்.

மேலும் அவர் உட்கட்டமைப்பு பணிகளில் சர்வதேச தரத்திலான ஹிஸ்புல்லா விளையாட்டு மைதானத்தினை மட்டக்களப்பு மாவட்டத்தில் நிர்மாணித்தமை குறிப்பிடத்தக்கதாகும். உதைப்பந்தாட்ட விளையாட்டு மைதானம், பொது விளையாட்டு மைதானங்கள் என பல்வேறு விளையாட்டு மைதானங்கள் அமையப்பெற வழிவகுத்ததோடு விளையாட்டுக் கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்களை வழங்கியும் தனது பங்களிப்பினை நல்கியுள்ளார்.

**சமய, கலை, கலாசார, இலக்கியப் பங்களிப்பு**

ஹிஸ்புழ்ழாஹ் அரசியல் வாழ்வோடு மட்டும் தன்னைச் சுருக்கிக்கொள்ளவில்லை. தனது சமயம், கலை, கலாசாரம், இலக்கியம் என்பவற்றில் மிகுந்த ஈடுபாடு காட்டியுள்ளார். தனது அபிவிருத்தியின் ஒவ்வொரு பகுதியிலும் இஸ்லாமிய கலாசாரத்திற்கும் அதன் பெறுமானங்களுக்கும் அவர் முக்கியத்துவம் கொடுத்துள்ளார்.

அவரது அயராத முயற்சியினால் இலங்கையில் இஸ்லாமிய கலாசார விழுமியங்களை பிரதிபலிக்கத்தக்கதாக பாரிய கலாசார மண்டபம் ஒன்று பல கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டது. ஹிஸ்புழ்ழாஹ் கலாசார மண்டபம் என அழைக்கப்படும் இம்மண்டபம் கிழக்கிலங்கையின் இஸ்லாமிய கலாசார மையமாக விளங்கிவருவது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை நகரை அழகுபடுத்தும் வேலைத்திட்டத்திற்கமைய தனது பிரதேசத்தில் இஸ்லாமிய கலாசாரத்தினை பிரதிபலிக்கும் வரவேற்பு நுழைவாயிலை உருவாக்க நடவடிக்கை எடுத்ததுடன் மட்டக்களப்பு-கல்முனை பிரதான வீதியில் காணப்படும் முப்பெரும் சந்திகளில் இஸ்லாமி கட்டிடக்கலையினை பிரதிபலிக்கும் மூன்று சுற்று வட்டங்களை மிகப்பெரும் சவாலுக்கு மத்தியில் அமைத்து தனது சமய, கலை, கலாசார ஈடுபாட்டினை வெளிப்படுத்தியிருக்கிறார் ஹிஸ்புழ்ழாஹ்.

வீதி அபிவிருத்தியோடு இணைந்ததாக தனது பிரதேசத்தில் காணப்படும் பிரதான வீதியை இணைக்கும் ஏனைய முக்கிய வீதிகள் இஸ்லாமிய கலீபாக்களின் பெயர் கொண்டு பெயரிடப்பட்டுள்ளதோடு பிரதான வீதியின் காத்தான்குடி வடக்கு எல்லையில் அரபு நாடுகளில் காணப்படும் பாரிய வரவேற்புக் கோபுரங்களை ஒத்ததாக இஸ்லாமி கலை அம்சங்கள் அடங்கிய அழகிய வரவேற்புக் கோபுரம் ஒன்றும் நிறுவப்பட்டுள்ளது.

மேலும் இலங்கையில் முஸ்லிம்களுக்கு என பிரகடணப்படுத்தப்பட்டுள்ள புனித பிரதேசம் காத்தான்குடியில் அமைவதற்கு ஹிஸ்புழ்ழாஹ் காரணமாக அமைந்தார். தமது கலாசாரத்தினை வளர்ப்பதற்கும் சமய கிரிகைகளை நிறுவுவதற்கும் என பல பள்ளிவாசல்கள், அரபு மத்ரசாக்கள் உருவாக்கப்படவும் ஹிஸ்புழ்ழாஹ் பங்களிப்புச் செய்துள்ளார்.

அவரது கலாசாரப் பங்களிப்பில் என்றும் நினைவுகூறத்தக்க அம்சம் முஸ்லிம் தாதியர் ஆடை ஒழுங்கு தொடர்பாக அவர் மேற்கொண்ட முயற்சியாகும். முஸ்லிம் தாதியர் நீண்ட காற்சாட்டை அணிவதற்கு இருந்த தடையை நீக்க தனிநபர் பிரேரணையினூடாக புதிய சட்ட மூலம் ஒன்றினைக் கொண்டுவந்து (P24/91 ஆம் இலக்க 07/08/1992) முன்னாள் ஜனாதிபதி ஆர்.பிரேமதாச காலத்தில், சுகாதார அமைச்சர் ரேனுக ஹேரத்தின் ஊடாக முஸ்லிம் பெண் தாதியார் உடைகளில் மாற்றங்களை ஏற்படுத்தி இஸ்லாமிய கலாசாரத்தினைப் பேண நடவடிக்கை மேற்கொண்டார்.

மேலும் மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதியில் பேரீத்த மர நடுகைத் திட்டத்தினை அவர் மேற்கொண்டமை இஸ்லாமிய கலாசாரத்தினைப் பிரதிபலிக்கும் குறிப்பிடத்தக்க அம்சமாகும். இம்முயற்சி பலரையும் கவர்ந்துள்ளதுடன் குறிப்பிட்டுப் பேசக்கூடியதாகவும் அமைந்துள்ளது. குறிப்பாக இன்று உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் பார்வையிடும் ஒன்றாக அது அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மேன்மைதங்கிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அவர்களின் நிதியொதுக்கீட்டின் கீழ் பலஸ்தீனத்தில் அமைந்துள்ள அல் - அக்ஸா பள்ளிவாசலின் கலை அம்சங்களை பிரதிபலிக்கத்தக்கவகையில் புதிய காத்தான்குடி பெரிய பள்ளிவாசல் அமையப்பெற நடவடிக்கை எடுத்ததுடன் இஸ்லாமிய பராம்பரிய நுண்கலை வளர்ச்சிக்கும் அரிய பங்களிப்பினை நல்கியுள்ளார். அதேவேளை இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில்

பாரிய கலாசார மண்டபம் ஒன்று அமைக்கப்படுவதற்கும் அவர் குறிப்பிடத்தக்களவு பங்களிப்புச் செய்துள்ளார்.

**தபால் தொலைத் தொடர்பு விருத்தி**

1994இல் உருவாக்கப்பட்ட பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில் ஹிஸ்புழ்ழாஹ் தபால் தொலைத்தொடர்பு பிரதி அமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டார். இப்பிரதியமைச்சுப் பதவியின் மூலம் நாட்டின் தொலைத்தொடர்பு விருத்தியில் ஹிஸ்புழ்ழாஹ் குறிப்பிடத்தக்க பங்கினை ஆற்றினார். பிரதியமைச்சராக இருந்த காலத்தில் இலங்கையின் தொலைத்தெடர்பினை உலகத் தரம் வாய்ந்த தொலைத்தொடர்பு சேவையாக மாற்றுவதற்கு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார்நாயக்க அரசாங்கத்தின் கீழ் தொலைத் தொடர்பு அமைச்சராக இருந்த மங்கள சமரவீரவுடன் சேர்ந்து கடுமையான பிரயத்தனங்களை மேற்கொண்டிருந்தார். இதன் நிமிர்த்தம் கொரியா, சுவீடன், ஜப்பான், ஐக்கிய அமெரிக்கா போன்ற பல்வேறு நாடுகளுக்கும் விஜயங்களை மேற்கொண்டு தொலைத்தொடர்பு விரிவாக்கம் தொடர்பிலான பல்வேறு மாநாடுகளில் பங்குபற்றியதுடன் பல்வேறு ஒப்பந்தங்களிலும் கைச்சாத்திட்டிருந்தார்.

தபால், தொலைத் தொடர்பு அபிவிருத்தியில் மட்டக்களப்பு, கல்முனை ஆகிய பிரதேசங்கள் அமைச்சரின் மிகுந்த கவனத்திற்குட்பட்டிருந்த இரு பிரதேசங்களாகும். இதன்படி ஏறாவூர் தொலைத் தொடர்பு பரிவர்த்தனை நிலையத்திற்கான புதிய கட்டிடத்திறப்பு, காத்தான்குடி தபாலகத்திற்கான புதிய கட்டிடம், தொலைத்தொடர்பு பரிவர்த்தனை நிலையத்திற்கான புதிய கட்டிடம், காத்தான்குடி ரெலிகொம் செயல் திட்ட அலுவலகக் கட்டிடத்திறப்பு, மருதமுனையில் உபதபாலகத்தினை தபாலகமாக தரமுயர்த்துதல், ஓலுவிலில் 30 இலட்சம் ரூபாச் செலவில் தொலைத்தொடர்புக் கூடம் ஒன்றினைத் திறந்து வைத்தல் போன்ற ஒரு தொடரான நடவடிக்கையினை பிரதியமைச்சர் மேற்கொண்டிருந்தார்.

கிழக்கு மாகாணத்தில் பிறந்திருந்தாலும் வடக்கு மாகாண மக்களின் தொலைத் தொடர்பு சேவைகளை சீர்செய்வதற்கும் அமைச்சர் சிரத்தையுடன் செயற்பட்டார். இதன்படி யுத்தகாலத்தில் யாழ் குடா நாட்டில் தொலைத்தொடர்வு வசதிகளை சீரமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான விஜயம்மொன்றினை மேற்கொண்டு அதற்கான நடவடிக்கைகளை எடுத்தார். இவ்விஜயத்தின் பயனாக சிவில் நிருவாகம் உறுதிப்படுத்தப்பட்டிருந்த யாழ் குடா நாட்டின் பல பகுதிகளில் தொலைத் தொடர்பு வசதிகள் ஏற்படுத்தப்பட வழிவகைகள் செய்யப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் பிரதியமைச்சராகப் பொறுப்பேற்றவேளையில் இலங்கையின் தபால் தொலைத்தொடர்பு வசதிகள் மிக மோசமான கட்டத்தில் இருந்தது. இந்நிலையினைப் போக்கி தபால் தொலைத் தொடர்பு புரட்சி ஒன்றினை இந்நாட்டில் ஏற்படுத்துவதற்கு பங்களிப்புச் செய்தவர்களுள் ஒருவராக எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புழ்ழாஹ் பார்க்கப்படவேண்டியவர். இதன்படி சிறிலங்கா

ரெலிகொம் நிறுவனத்தின் 150K விசேட திட்டத்தினை அறிமுகப்படுத்தி 150 ஆயிரம் தொலைபேசிகள் மூன்று வருடங்களுக்குள் இலங்கையில் விநியோகிக்கும் திட்டத்தினை ஆரம்பித்துவைத்தார்.

மேலும் சுவீடன், கொரியா, சிங்கப்பூர், யப்பான் போன்ற நாடுகளுக்குச் சென்று அந்தந்த நாடுகளின் தொலைத்தொடர்பு நிறுவனங்களுடன் பேசி நீண்டகால திட்டங்களை வகுத்து இலங்கை முழுவதும் தொலைபேசிகள் பகிர்ந்தளிக்கப்பட்டன. இதன் மூலம் இலங்கையில் தொலைத் தொடர்பு வசதிகளில் பாரியளவு முன்னேற்றம் ஏற்பட்டது. குறிப்பாக இவரது பதவிக்காலத்தில் கிழக்கு மாகாணம் தொலைத் தொடர்பு துறையில் பாரிய வளர்ச்சி கண்டது.

மலையகம் உட்பட நாடு முழுவதும் தபால் தொலைத் தொடர்பு வசதிகள் விருத்தி செய்யப்பட்டதுடன் தபலாகங்கள், உப தபாலகங்ளுக்கான கட்டிடங்கள் நிர்மாணிக்கப்படவும் ஹிஸ்புழ்ழாஹ் பங்காற்றியிருந்தார். அவற்றுக்கான ஆளணி விடயத்திலும் ஹிஸ்புழ்ழாஹ் நடவடிக்கைகளை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

மேலும் டயலொக் நிறுவனத்தின் இலங்கை வருகை தொடர்பிலும் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புழ்ழாஹ் வுக்கு பெரும் பங்குண்டு. அதேவேளை மலேசிய ரெலிகொம் நிறுவனத்துடன் உடன்படிக்கை கைச்சாத்திட்டதன் மூலம் முதலாவது கைத்தொலைபேசி இலங்கையில் கொண்டுவரப்படவும் ஹிஸ்புழ்ழாஹ் பங்களிப்புச் செய்துள்ளார்.

**வீடமைப்பு**

ஹிஸ்புழ்ழாஹ் மேற்கொண்ட உட்கட்டமைப்பு விருத்தி நடவடிக்கைகளுள் வீடமைப்புத் திட்டங்கள் குறிப்பிடத்தக்கதாகும். அடிப்படை வசதிகளற்ற, பல்லாயிரக்கணக்கான மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் அவர் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். இதற்கமைய மட்டக்களப்பு மாவட்டத்தில் பல்வேறு பிரதேசங்களில் பல நூற்றுக்கணக்கான வீடுகளை அமைத்து அவர் பங்களிப்புச் செய்துள்ளார்:

மஞ்சந்தொடுவாய் குவைற் சிற்றி, காங்கேயன்னோடை ஈரான் சிற்றி, காத்தான்குடி கே.பீ.எம்.ஜீ சிற்றி, ஏறாவூர் ஹிஸ்புழ்ழாஹ் நகர், றிதிதென்ன, ஜயந்தியாய, ஏறாவூர் அப்துல் மஜீத் புரம், ஒல்லிக் குளம் சேக் அர்ராசித் சிற்றி, மங்கலகம வீட்டுத் திட்டம், மன்முனை சேக் யஹ்யா சிற்றி உட்பட கர்பலாக் கிராமப் புணரமைப்பு என அவரது வீடமைப்புத் திட்டங்கள் நீண்ட பட்டியலைக் கொண்டது. அதிலும் குறிப்பாக நூற்றுக்கணக்கானோர் வீடுகளை அமைப்பதற்கு அவர் நிதியுதவிகளை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

**சிறுவர் மற்றும் மகளிர் அபிவிருத்தி**

சிறுவர் மற்றும் மகளிர் அபிவிருத்தி தொடர்பான விடயங்களில் அரசாங்கம் சிறந்த கொள்கை வழிகாட்டல்களுடன் செயற்படுவதற்கும் ஹிஸ்புழ்ழாஹ் பங்காற்றியுள்ளார். குறிப்பிட்டகாலம் சிறுவர் மற்றும் மகளிர் அபிவிருத்திப் பிரதி அமைச்சராக அவர் இருந்த போது அத்துறையின் வளர்ச்சிக்கு அவர் ஆற்றிய பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாகும்.

இதற்கமைய வடக்கு கிழக்கு மாகாணங்களில் மகளிர் அபிவிருத்தி மற்றும் சிறுவர் பாதுாப்புத் தொடர்பில் நிலவிவந்த ஆளணிகளை நிரப்ப நடவடிக்கை எடுத்ததுடன் அப்பிரதேசங்களில் மகளிர் அபிவிருத்தி, சிறுவர் பாதுகாப்புச் சார்ந்த பல்வேறு நடவடிக்கைகளையும் முன்னெடுத்தார். அதேவேளை தேசிய மட்டத்தில் மகளிர் பாதுகாப்பு சிறுவர் பாதுகாப்புத் தொடர்பான சட்டமூலங்கள் உருவாக்கப்படவும் பிரதியமைச்சர் முனைப்புடன் செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை சிறுவர் பாதுகாப்புத் தொடர்பில் சர்வதேச ரீதியாகப் முக்கிய இடத்தினைப் பெற்றுள்ளது. இதன்படி 2013ஆம் ஆண்டு சிறார்களுக்கான சார்க் செயலகம் மேற்கொண்ட இரு வருட ஆய்வின் முடிவாக சிறுவர்கள் தொடர்பான சட்டமூலம், சிறுவர் பாதுகாப்பு மற்றும் நலன் தொடர்பில் சார்க் நாடுகளுக்குள் இலங்கை முதல் இடத்தினைப் பெற்றுக்கொண்டது. இவ்வடைவு ஹிஸ்புழ்ழாஹ் மேற்கொண்ட முயற்சியின் பெரும் பேறாகும்.

**தேசிய அபிவிருத்திற்கான பங்களிப்பு**

பிரதேச அபிவிருத்தி மற்றும் இதர வழிகளின் ஊடாகவும் தேசிய அபிவிருத்திற்கு ஹிஸ்புழ்ழாஹ் பங்களிப்புச் செய்துள்ளார். நாட்டின் தேசிய நிருவாகத்தினை இலகுபடுத்தும் செயற்றிட்டத்தின் கீழ் காத்தான்குடி, ஏறாவூர், ஓட்டமாவடி, வாழைச்சேனை ஆகிய பிரதேசங்களில் பிரதேச செயலகங்களை அவர் உருவாக்கினார். மேலும் பிரதேச சபையாக விளங்கிய காத்தான்குடிப் பிரதேச சபையினை நகர சபையாக மாற்றிய பெருமையும் அவரையே சாரும்.

பொறுப்புள்ள பல பதவிகளைப் பெற்று பெருந்தொகையான வெளிநாட்டு நிதியுதவிகள் இந்நாட்டினை வந்தடைவதற்கு தனது அபிவிருத்தி அரசியல் நுட்பத்தினை கச்சிதமாகப் பயன்படுத்தி நாட்டின் தேசிய அபிவிருத்திற்கு பெரும் பங்காற்றியுள்ளார்.

அவரது அயராத முயற்சியினால் சிறிலங்கா ரெலிகொம், துறைமுகம், வைத்தியசாலைகள், நீர்வழங்கள் வடிகாலமைப்புச் சபை, போக்குவரத்து, கல்வி, வெளிநாட்டு வேலை வாய்ப்பு உட்பட பல துறைகளில் பல நூற்றுக்கணக்கான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டது. இதன் மூலம் நாட்டின் வேலையின்மையினைப் போக்கி ஆரோக்கியமான இளைஞர் சமூகம் ஒன்றினைக் கட்டியெழுப்ப ஹிஸ்புழ்ழாஹ் நடவடிக்கை எடுத்தார். விசேடமாக வேலைவாய்ப்புக்களை வழங்கும் போது தனது பிரதேசத்திற்கு மட்டுமன்றி இதர பிரதேசத்தினையும் கவனத்திற்கொண்டு செயற்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இலங்கைக்கு முதலீடுகளை வரவழைத்து இலங்கையின் தேசிய வருமானத்தினைப் பெருக்குவதற்கும் ஹிஸ்புழ்ழாஹ் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார். இவரது முயற்சியின் பயனாக வடக்கு கிழக்கு மற்றும் வடக்குக் கிழக்குக் வெளியே பல சர்வதேச முதலீட்டாளர்கள் முதலீடுகளை மேற்கொள்வதற்கு விருப்பம் தெரிவித்துள்ளனர். கட்டார், துபாய், யப்பான், கொரியா, சிங்கப்பூர், பிரான்ஷ், மலேசியா, சவூதி அரேபியா போன்ற நாடுகளுக்கு அவர் மேற்கொண்ட விஜயங்களின் ஊடாக பல முதலீட்டாளர்கள் இலங்கையின் சுற்றுலாத் துறை, மீன்பிடி அபிவிருத்தி, திருகோணமலை துறைமுக அபிவிருத்தி, பாரிய விவசாய அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபட இணக்கம் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

<u>சுற்றுலாத் துறை விருத்தியினூடாகவும் நாட்டின் முதலீட்டு வளர்ச்சிக்கு அவர் பங்காற்றியுள்ளார்.</u>

வீதியின் நடுவே பேரீச்சம் கன்றுகள் நாட்டப்பட்டு அவை காய்ந்து குலுங்குகின்ற வகையில் பராமரிப்பு நடவடிக்கைகள் முடுக்கப்பட்டு மிக அழகாகக காட்சி தரும் பிரதான வீதியை பார்வையிட ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வருகை தருவது இந்த திட்டத்தின் வெற்றியாக நோக்கப்படுகின்றது.

இந்த அழகுபடுத்தலின் பின்னால் பொருளாதார நன்மைகள் மறைந்திருந்தமை தற்போது வெளிப்பட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது. வெளியூர்களில் இருந்து கிழக்கு மாகாணத்திற்கு வரும் சுற்றுலாப் பயணிகள் தங்களது நிகழ்ச்சி நிரலில் காத்தான்குடிக்கான தரிசித்தலை உள்ளடக்குகின்ற அளவுக்கு இந்த பிரதான வீதி அபிவிருத்தி மாறி இருப்பதோடு இதன் மூலம் வர்த்தக நிலையங்களுக்கான வியாரபாரங்களும் குறிப்பிடத்தக்க வகையில் அதிகரிப்புப் பெற்றிருக்கின்றது. காத்தான்குடியை ஒரு உதாரண நகராக ஏனையவர்கள் பேசி வருவதும் நமது காதுகளில் விழுகின்றது. சாத்தியமற்றதாகக் காணப்பட்ட இந்த விடயத்தினை தனது ஆளுமையின் மூலம் சாத்தியப்படுத்தி முழு காத்தான்குடி மக்களுக்கும் பெருமையை இந்த ஹிஸ்புல்லாஹ் ஏற்படுத்தி இருக்கின்றார் என்றே சொல்ல வேண்டும்.

காத்தான்குடி மக்கள் மாத்திரமல்ல அதனை அண்டி வாழும் ஏனைய சகோதர இன மக்களும் இங்கே வந்து மிக சந்தோசமாக தங்களது ஓய்வு நேரத்தினை களித்துச் செல்லும் கேந்திர நிலையமாகவும் இது தோற்றம் பெற்றுள்ளது. இதன் பிற்பாடு பல்வேறுபட்ட கால கட்டங்களில் காத்தான்குடி கடற்கரை மேலும் அழகுபடுத்தலுக்கு உள்ளாகி வருகின்றது.

கத்தான்குடி கடற்கரை மிக சிறப்பாக அபிவிருத்தி கண்ட போதிலும் அதிகரித்து வரும் சனத்தொகைக்கு ஏற்ப மற்றுமொரு ஓய்வுத்தளத்தினை இனங்கண்டு அதனை அபிவிருத்தி செய்ய வேண்டிய தேவை உணரப்பட்ட போது அதற்குப் பொருத்தமான இடமாக காத்தான்குடியின் மேற்கே அமைந்துள்ள வாவி இனங்காணப்பட்டது. இந்த வாவியை அண்டிய

பிரதேசங்களின் அபிவிருத்தியிலும் ஹிஸ்புல்லாஹ் தனது கவனத்தினை செலுத்தி இருந்தார். கடற்கரை போன்று இங்கும் வாவிக்கு சமாந்தரமாக ஊரின் முழு நீளத்திற்கும் வீதி அமைக்கப்பட்டு மிக அழகிய இடங்களில் ஒன்றாக காத்தான்குடி ஆற்றங்கரை மாற்றம் பெற்றிருக்கின்றது. இதன் விளைவில் காத்தான்குடி ஆற்றங்கரையை அண்டி வாழும் மக்களின் போக்குவரத்து வசதிகள் சீர்பெற்றிருப்பதும் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்குரிய வாய்ப்பினையும் இந்த அபிவிருத்திகள் ஏற்படுத்தி இருக்கின்றது. மேலும் குறிப்பாக ஆற்றங்கரையினை அண்டி வாழும் பெண்கள் தங்களது ஆரோக்கிய தேவைக்காக உடற்பயிற்சிகளை மேற்கொள்வதற்கான வாய்ப்பினையும் இந்த வீதி ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றது. அதேவேளை ஆற்றங்கரையினை அண்டிய பிரதேசத்தின் காணிகளுக்கான சந்தைப் பெறுமதி சடுதியாக உயர்வு பெற்றுள்ளமை இந்த அபிவிருத்தி திட்டத்தின் மூலம் அடையப்பட்ட பொருளாதார நன்மைகளில் மிக முக்கியமான ஒன்றாக நோக்கப்படுகின்றது.

இந்த அபிவிருத்திகள் இடம்பெற்றதன் பிற்பாடு இந்த நகரை நோக்கி வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை கணிசமான அளவு அதிகரிப்பு பெற்று வருகின்றது. இதன் காரணமாக ஏராளமான தங்குமிட அறை வசதிகள் ஏற்படுத்தப்பட்டு அதன் மூலம் பொருளாதார நன்மைகளை இந்த நகரம் கண்டு வருவதும் அவதானிக்கக் கூடிய விடயமாக இருக்கின்றது.

## முடிவுரை

இவ்வகையில் நோக்குகின்ற போது முஸ்லிம் சமுகத்தில் பல்துறை ரீதியான அபிவிருத்திகளை வழங்கிய அரசியல் ஆளுமைகளுள் ஒருவராக ஹிஸ்புல்லாஹ்வினை சுட்டிக்காட்ட முடியும். அரசியல் பணியின் தாற்பரியத்தை உணர்ந்து செயற்பட்டிருக்கும் அவர், சமுக அரசியலை அபிவிருத்தி அரசியலால் அடையாளம் காட்டியிருக்கின்றார். அரசியலை அணுகியிருக்கும் அவரது புதிய பாங்கு நடைமுறைப் பெறுமானம் கொண்டதாகும். அரசியலில் எப்பொறுப்பினை ஏற்றாலும் சமுகத்தின் அபிவிருத்தி இலக்கினை அடைய முடியும் என்பதனை ஹிஸ்புழ்ழாஹ் எனும் அரசியல் ஆளுமை நிரூபித்திருக்கின்றது என்றால் மிகையாகாது. சமூகம் வேண்டி நிற்கும் அரசியற் பண்பு ஹிஸ்புழ்ழாஹ் எனும் அரசியல் ஆளுமையில் அவதானிக்க முடிகின்றமையே அவரது கடந்கால தேர்தல் வெற்றிகள் பறைசாற்றி நிற்கின்றன.

மொத்தத்தில் அவரது அபிவிருத்தி அரசியலின் உபாயங்களாக உடனுக்குடன் பிரச்சினைகளைத் தீர்த்தல், இராஜதந்திர ரீதியாக எதனையும் அணுகுதல், எதனையும் எளிதில் வெற்றிகொள்ளும் திறன், மக்களின் கருத்துக்களை கேட்டறியும் தன்மை, மசூரா அடிப்படையிலான முடிவு எடுக்கும் மனப்பாங்கு, மூத்த பிரஜைகளின் அனுபவங்களை ஏற்றுக்கொள்ளும் பக்குவம், விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை, சமூக ஏற்றத்தாழ்வுகளையும்

இனபேதங்களையும் அனுசரித்து செல்லும் நிர்ப்பந்த நோக்கு, நேர்நிலைச் சிந்தனை முதலானவை அமைந்தமையே அவரது முழு முதல் அபிவிருத்தி அரசியல் வெற்றி பெறுவதற்கு காரணமாக அமைந்தன எனலாம்.

அவரது வெற்றிகரமான கடந்தகால பதிவுகளையும் அனுபவங்களையும் கருத்திற்கொண்டே பலம்வாய்ந்த அமைச்சுப் பொறுப்பு அதிஉத்தம ஜனாதிபதி அவர்களினால் வழங்கப்பட்டது. பொருளாதார அபிவிருத்திப் பிரதியமைச்சராக விளங்கும் அவர் அவ்வமைச்சின் கீழ் சுற்றுலாத் துறை, வெளிநாட்டு முதலீடு, வறுமையினை ஒழித்து, உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தல் போன்ற முக்கிய பொறுப்புக்களை நிறைவேற்றி இந்நாட்டுக்கும் மக்களுக்கும் பெரும் பங்களிப்புச் செய்துவருகின்றார்.